உ
சிவமயம்

# சித்தானைக்குட்டி சுவாமியார்

சேது நாடு இந்தியாவின் தென்கோடியில் உள்ளது. இந்நாட்டை ஆண்ட மன்னர்களைச் (குறுநில மன்னர்) சேதுபதிகள் என்று அழைப்பர்கள். இங்குதான் இராமேஸ்வரம் என்னும் புண்ணிய சிவத்தலம் இருக்கிறது. இராமர், ஈஸ்வரனை வைத்து வழிபட்ட தலம் “இராமேஸ்வரம்” ஆயிற்று. இன்று சேது நாடு இராமநாத மாவட்டமாகப் பெயர் இடப்பட்டுள்ளது. சேது நாடு ஒரு சிறு கடலால் இந்தியாவினின்றும் பிரிக்கப்பட்டிருந்தது. இராமர் இலங்கைக்குப் படையெடுத்த காலத்தில் குரங்கினங்களால் சேது பந்தனம் (சேது அணை) அமைக்கப்பட்டு இணைக்கப்பட்டது.

சங்ககாலப் புலவர்களில் பலர் இங்கு இருக்கின்றார்கள். அவர்களில் நல்லந்தையார், நன்முல்லையார், ஒக்கூர்மாசாத்தியார் என்போர் சிறப்புடையவர்கள். இராமநாதபுரத்தை ஆண்டு வந்த சிற்றரசர் ஒருவருடைய ஒரே ஒரு மகன் அரசாட்சியை விரும்பாது அவர் மனம் துறவை நாடி நின்றது. அரச மகனாகப் பிறந்த சித்தார்த்தர் போல அவர் நிலையும் இருந்தது. சித்தார்த்தர் புத்த ராகிப் புத்த சமயம் பரவக் காரணமாக இருந்தார். இராமநாதபுரத்துச் சிற்றரசனாக வரவேண்டிய கோவிந்தசாமி என்பவரே இலங்கைக்கு வந்து சித்தானைக்குட்டிச் சுவாமியாகியவர். இவர் ஈழத்துச் சித்த சிரோமணிகளில் ஒருவரானார். இவர் செய்த அற்புதங்களும் சித்துக்களும் அனேகம்

இராமநாதபுரத்து சிற்றரசர்களின் இராசதானி “பெருநாளி” என்று அழைக்கப்பட்டு வந்தது. இப்பெருநாளில் சமஸ்தானத்தை ஒருகால் பெருநோய் ஒன்று பரவி அந்நாட்டைப் பெரும் அழிவுக்கு இட்டுச் சென்றது. குடும்பத்தோடு பலர் மாண்டு போயினர். அச்சமயம் ஊர் பேர் தெரியாத இருவர் இங்கு வந்து நடமாடிக் கொண்டிருந்தனர். நோயுள்ள வீடுகளிற் சென்று உணவு கேட்டு நின்றனர். தொற்று நோயாதலின் இவர்களுக்கு உணவு வழங்கப் பலரும் மறுத்தனர். அவர்களும் வற்புறுத்தி வலிந்து உணவு பெற்றுச் சென்றனர். உணவு பெற்றுண்ட வீட்டிலுள்ளோர் நோய் நீங்கிச் சுகம் பெற்றனர்.

இருமகான்களும் அந்நோயைத் தம் நோய் போற் போற்றி மக்க ளைச் சுகம் பெறச்செய்த செய்தியைச் சேதுபதி மகாராசாவும் அறிந்தார்.

அச்செய்தியறிந்தவுடனே மகாராசா தன் மகன் கோவிந்தசாமியை அனுப்பி அப்பெரியார்களை அழைத்துவரும்படி பணித்தார். மன்னன் அவர்களை அழைத்துப் பாராட்டிப் பரிசில் வழங்கக் கருதினார். நடந்தது வேறு விதமாகிவிட்டது. மன்னர் மகன் அப்பெரியார்களைச் சந்தித்தார். அவர்களின் பாதங்களில் வீழ்ந்து வணங்கினார், ஆசி பெற்றார். அவர்களின் அருள் நோக்குக் கிடைத்தது. இப்பொழுது அவர்கள் மூவராயினர். சேர்ந்து ஊர் சுற்றி நோய் தீர்த்து வைத்துப் பின்னர் வடக்கு நோக்கித் தீர்த்த யாத்திரைக்குப் புறப்படலாயினர். யாத்திரை முடிந்ததும் இறுதிக்கட்டமாக மூவரும் இலங்கைக்கு வந்து சேர்ந்தனர்.

இம்மூவரில் ஒருவர் மலையகஞ்சென்று நாவலப்பிட்டி குயின்ஸ்பரித் தோட்டத்திலிருந்து மலையகத்தை அருளாட்சி புரிந்த நவநாதச்சித்த சுவாமியாராவார். மற்றவர் கொழும்பிலிருந்து இலங்கையின் மேற்கை யும், தெற்கையும் அருளாட்சி புரிந்த பெரியானைக்குட்டி சுவாமியாராவர். இன்னுமொருவர் மட்டக்களப்பிலிருந்து கிழக்கிலங்கையையும் கதிர் காமம் முதலாமிடங்களையும் அருளாட்சிபுரிந்து நீண்டகாலம் வாழ்ந்து அற்புதங்களாலும், சித்துக்களாலும் மக்கள் மனதில் நீங்கா இடம் பெற்ற சித்தானைக்குட்டிச் சுவாமியராவார். இம் மூவரும் இலங்கையின் தென்புலத்துச் சித்தசிரோமணிகளாக மதிக்கப்பட்டவராவார்கள்.

மற்றைய முப்பெரும் சித்தசிரோமணிகளாக மதிக்கப்பட்ட மூவருள் ஒருவர்தான் கடையிற்சுவாமியாராவர். மற்றையவர் நல்லூர்த் தேரடிச் செல்லப்பாசுவாமியாராவர். மூன்றாமவர் சிவயோக சுவாமி களாவர். இவர்கள் இலங்கையின் வடபுலத்தை அருளாட்சி புரிந்த சித்தசிரோமணிகளென்று என்றும் போற்றப்படத்தக்கவர்கள். இங்கு குருசிஷ்ய பரம்பரை கடையிற் சுவாமியாரில் தொடங்கி இன்றும் வளர்ந்து கொண்டிருக்கிறது. என்றும் வளர்ந்து கொண்டிருக்கும். சித்தானைக்குட்டிச் சுவாமியாரும், சிவயோகசுவாமியாரும், மக்கள் மத்தியில் நடமாடுந் தெய்வங்களாக நீண்டகாலம் வாழ்ந்து அவர்கள் குறைகளை நிவர்த்தி செய்த மகான்களாகும். இவர்கள் கால, தேய வர்த்தமானங்களைக் கடந்து நின்றவர்கள். இவர்களின் அருளாட்சியும், வழிகாட்டலும் இன்றும் தொடர்கின்றன என்பதும் ஒரு புதிரே.



மேலே கூறப்பட்ட அறுவருடன் இன்னுமொருவர் சித்தசிரோமணி யாக மதிக்கப்பட்டவர். இரசவாதவிற்பன்னர் குழந்தைவேலுச்சாமியா ராவர். அவரின் சமாதி கீரிமலைப் புண்ணியதல தீர்த்தக்கரையில் வைக்கப்பட்டுள்ளது. சமாதிக் கோயிலும் கீரிமலையில் உண்டு. இக்கோயில் அறங்காவலராக நவாலி முதலியார் மகேசன் இருந்து வந்துள்ளார். அங்கு குழந்தைவேலுச்சுவாமியார் மடமும் ஆக்கப்பட்டுத் தர்மகாரியங்கள் நடந்து வருகின்றன.

இந்தியாவிலிருந்து நவநாதசித்தர் தம் குழுவில் ஒருவரைப் பிரித்து விட்டே மற்று இருவருமாகக் கொழும்பு வந்து கப்பல் மூலம் இறங்கியுள்ளனர். விட்டுவந்தவர் சின்னச்சுவாமியார். அவர்பாடு என்னாகும்? கையில் பணமில்லை, அரசபோகத்தைத் துறந்து சுவா மியானவர். யாரிடமும் இரக்கும் பழக்கமில்லை. அவர்தான் கோவிந்த சாமியென்னும் பூர்வீக நாமத்தையுடைய சித்தானைக்குட்டிச்சுவாமியார். சுவாமிகள் கொழும்பு துறைமுகத்தில் வந்து இறங்க உள்ளனர் என்று அறிந்து அவர்களை வரவேற்கப் பக்தர் கூட்டம் பெருமளவில் கூடிவிட்டது. இக்கூட்டத்தில் ஒருவராகக் கோவிந்தசாமியும் (சின்னச் சாமியாரும்) காணப்பட்டார். இவரைக் கூட்டத்தின் மத்தியில் கண்ட குருநாதர்கள் இருவரும் எவ்வித ஆச்சரியமும் படவில்லை. கார ணம் முன்னரே இவரின் பக்குவநிலையை அறிந்திருந்தனர். சின்ன வர் ஒரு கனகசித்தர் என்பதனையும் தெரிந்தே அங்கு கைவிட்டு வந்தனர். அவர் இங்கு நம்மை வரவேற்பார் என்பதும் அவர்களுக்குப் புரியாததொன்றல்ல. ககனம் என்பதும் ஆகாயம் என்பதாகும். சித்தர் ஆகாயவெளியிலும் சஞ்சரிப்பர் என்பது உண்மையே.

மூவரும் கொழும்பில் இணைந்து விட்டனர். மற்றிருவரையும் கொழும்பில் தங்கவைத்து நவநாதரும் மலையகம் புறப்பட்டுவிட்டார். கொழும்பில் சித்தானைக்குட்டி அங்குள்ள தெருவெல்லாம் திரிந்து, கிடைக்கும் உணவுகளை ஏற்றுண்டு சாதாரண மக்களுடன் சேர்ந்து, ஆங்காங்கு படுத்துறங்கியுங் காலத்தைக் கழிக்கலானார். பெரியானைக் குட்டியின் ஞானக்குழந்தைதான் சித்தானைக்குட்டியென்று யாரும் அறியார். தன்னை யாரென்று இனங்காட்டாது அவரும் மக்களில் ஒருவராகவே நடமாடினார். அன்றியும் இவர்களைப் போலவே பெரியவரிடம் சென்று தாம் கொண்ட பக்தியையுங் காட்டி வந்தார்.

ஒருநாள் பெரியவரிடமிருந்து சித்தானைக்குட்டிக்குப் பணிப்புரை வந்தது. "நாம் இருவரும் பேராதனைக்குப் போகவேண்டும் புறப்படு"

அதுதான் பணிப்புரை. அவரும் இரண்டு டிக்கற்றுடன் வந்துசேர்ந்தார். குருவும் சீஷனும் உடன் புறப்பட்டனர். இருவரும் பேராதனையில் புகையிரதத்திலிருந்தும் இறங்க அவர்களுக்கு மூன்றாமவர் தரிசன மானார். அவர்தான் நவநாதச்சித்தர். அவரின் கரத்தில் பிரம்பொன்று காணப்பட்டது. அப்பிரம்பால் முதலில் தன் தலையில் தொட்டார். பின்னர் பெரியானைக்குட்டியின் தலையிலும் அடுத்துச் சித்தானைக் குட்டியின் தலையிலும் தொட்டார். இதன் அர்த்தம் தொட்ட பிரகாரம் தான் இவர்கள் சமாதியடைவர் என்பதாகும். இங்ஙனமே பின்னர் நிகழ்ந்துள்ளமையை யாவரும் அறிவர். இவர்கள் இருவருக்கும் தரிசனங் கொடுத்துக் குறிப்பால் விஷயத்தைப் புரியச் செய்துவிட்டு மறுகணம் புகையிரதமேறி நவநாதசித்தர் நாவலப்பிட்டிக்குப் பிரயாண மானார். மற்றிருவரும் புகையிரதமேறி கொழும்பு வந்து சேர்ந்தனர்.

பின்னர் பெரியவரின் கட்டளைப்படி சித்தானைக்குட்டி முனீஸ்வரம் சென்று முனீஸ்வரர் ஆலயத்திலிருந்து பல சாதனைகளைச் செய்து காட்டிக் கொண்டிருந்தனர். அப்பொழுது பெரியவர் சமாதியடைந்ததைத் தன் தெய்வீகச் சக்தியால் அறிந்து கொழும்புக்கு வந்தார். பெரிய வரின் சமாதியில் ஒரு மண்டலத்துக்கு மேலாகக் கடுந்தவம் புரிந்து குருநாதருக்குத் திருவடி வழிபாடுகளைப் புரிந்துகொண்டிருந்தார். இறுதியாகப் பெரியவரிடமிருந்து சின்னவருக்கு ஒரு தரிசனம் கிடைத்தது. அதுதான் நீ நவநாதசித்தரின் சமாதிக்குப் போவென்ற கட்டளையாகும். சித்தானைக்குட்டி அங்கு செல்வதற்குப் புறப்பட்டார்.

அவரின் கையில் பணம் இல்லை. வழிநடக்க அலுப்பு ஒருபுறம், மறுபுறம் கண்நோய், நடராசாவாகவே பிரயாணத்தைத் தொடர்ந்தார். சிறிது தூரம் நடந்திருப்பார். கால் உளைவு தொடங்கிவிட்டது. அப்போது அங்கு ஒரு கடை தென்பட்டது. அது சிங்களவர் கடையா கவும் இருந்தது. தான் ஒரு தமிழன், எப்படியென்றாலும் இருந்து விட்டுப் போவோம் என்று நினைத்துக் கொண்டேயிருந்துவிட்டார். அக்கடைக்காரன் இவனொரு கள்வனோ என்று நினைப்பது சுவாமி யாருக்குத் தெரிந்தது. அலுப்பையும் பாராது எழுந்து நடந்தார். வழியில் செல்லும்போது சுவாமியாருக்குச் சாராயம் குடிக்க வேண்டு மென்று ஆசை தோன்றியது. கையில் பணமில்லை. இதற்காகக் குருவை நொந்துகொண்டார். வழியில் சிறிது தூரம் தான் நடந்திருப்பார்? ஒரு முடிச்சு வழியில் இருப்பதைக் கண்டார். அதனை எடுத்து அவிழ்த்துப் பார்த்தார். பத்துரூபா நோட்டு இருந்தது. இது கிடைத்



ததும் குருவை நொந்தமைக்கு வருந்தி மன்னிப்புக் கோரினார். வழியில் வரும் சாராயக்கடைக்குச் சென்று சாராயம் குடிக்க வேண்டுமென்று விரைந்தார். சாராயக்கடையும் வந்தது. அங்குசென்று வேண்டியளவு சாராயத்தைப் பெற்றுக் குடித்தார். தாகம், பசி அனைத்தும் பறந்து போயின. மனித சன நடமாட்டம் நிறைந்த வழியில் இப்பணம் என் கைக்கு வரச்செய்தது குருநாதனின் கருணைதான் என்று நினைத்துக் கொண்டு குடிமயக்கம், வெறியேது மின்றிக் கடுகதியில் நடக்கலானார். காலமும் கரைந்து இருட்டி விட்டது. வழியில் P.W.D. ஓவசியர் வீடு தென்பட்டது. அங்கு சென்று தங்கலாம் என்று கருதிச் சென்றார். அது ஒரு யாழ்ப்பாணத்தவர் வீடாயிருந்தது.

சுவாமியாரைக் கண்டதும் ஓவசியர் வந்து முகமலர்ச்சியோடு அழைத்துச் சென்று உபசரித்து அன்றிரவு அங்கு தங்கவைத்தார். அவருக்கு இருந்த கண் நோய்க்கும் ஓவசியர் மருந்து வழங்கினார். கண்நோய் மாறும் வரையும் அங்கிருந்து மருந்து செய்யுமாறு சுவாமியாரை வேண்டிக்கொண்டார். சிலநாட்கள் சுவாமிகள் அங்கிருந்து மருந்தெடுத்தும், ஓய்வுபெற்றும் நோய் மாறியதும் நாவலப்பிட்டிக்குப் புறப்பட்டுச் சென்றார். அங்கிருந்து சுவாமியார் குயின்ஸ்பரி தோட் டத்துக்கு வந்துசேர்ந்தார்.

நவநாதர் பெருமாள் அம்மையாரிடம் சித்தானைக்குட்டியைப் பற்றிய சிறப்பம்சங்களைப் பற்றிக் கூறியிருந்தார். சித்தானைக்குட்டி எப்படியிருப்பார், அவர் குண நலன்கள் எல்லாம் எப்படியிருக்கும் என்றெல்லாம் நவநாதரிடம் சமாதியடையமுன் பெருமாள் அம்மையார் கேட்டு வைத்திருந்தார். குயின்ஸ்பரிக்கு வந்த சுவாமியார் வேறெங்கும் செல்லாது நவநாதரின் சமாதிக்கு வந்து சேர்ந்தார். முதலில் முருகப் பெருமானை வணங்கிக் கொண்டு நவநாதரின் சமாதிக்கரையில் அமர்ந்து தியானத்தில் ஆழ்ந்தார். அருவி நீர் ஓட்டத்தின் ஓசை, குளிர்ந்த காற்று, நிழல் தரும் நல்ல தருக்கள், பார்த்த இடமெங்கும் பச்சைப் பசேல் என்று காட்சி தரும் துளிர் விட்டுக் கொண்டிருக்கும் தேயிலைச் செடிகள், அமைதியான சூழல், இவையெல்லாம் மன ரம்மியத்தை ஏற்படுத்த நீண்ட நேரம் சுவாமி தியானத்தில் ஆழ்ந்து விட்டார். தோட்டக் காவலாளரும் அவரைச் சுற்றி வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றனர். நீண்ட நேரத்தின்பின் சுவாமியார் கண் விழித்து "நவநாதசித்தா" என்று குருநாதரின் நாமத்தைப் பெரிய

ஒலியாக எழுப்பிக் கொண்டிருந்தார்கள். அவ்வொலி மந்திர ஒலி யாகி எல்லாச் செவியிலும் புகுந்து ஒரு அமைதியை உண்டாக்கியது. நீண்ட காலத்தின் பின் எழுந்த ஒலி எல்லார் மனத்திலும் இன்ப உணர்ச்சியை உண்டாக்கியது. நவநாதசித்தரின் சிந்தனையை மீண்டும் உருவாக்கியதைப் போல் இது அமைந்தது. அத்தனை பெருமைக்குரியவர் நவநாதசித்தர்.

அங்கு நின்ற தொழிலாளிகளுள் ஒருவர், "தங்களைப் பெரிய கங்காணி அம்மையார் அழைத்து வருமாறு கூறினார். வாருங்கள் கூட்டிச் சென்று விடுகிறேன்" என்றார். சுவாமியாரும் அவன் வீடு காட்ட அங்கு சென்றார். வீடு சென்ற சுவாமியார் "அம்மா தர்மம்" என்று குரல் கொடுத்தார். நவநாதசித்தர் முன் சொல்லி வைத்த விடயங்களைப் பெருமாள் அம்மையாருக்கு அவ்வொலி ஞாபகத் துக்குக் கொண்டுவந்தது. உடனே அம்மையார் கதவைத் திறந்து பூவும் நீரும் எடுத்து வந்து பாதபூஜை செய்து வணங்கியபின், எவ்வளவு காலம் தங்களைக் காண்பதற்குக் காத்திருக்கின்றேன், வாருங்கள் சுவாமி என்று அழைத்துச் சென்று உபசார வார்த்தைகள் கூறி அமரவைத்து மாகேஸ்வர பூஜையை (அமுதளித்தலை) நிகழ்த்தினார். பின் அம்மையாரின் பேரப்பிள்ளைகள் வந்து சுவாமி யாரை வணங்கி ஆசி பெற்றனர்.

சுவாமியாருக்குப் பெருமாள் அம்மையார் குடும்பத்தினர், வேண்டிய வற்றை அவ்வப்போது செய்து உபசரித்து வந்தனர். சுவாமியார் ஒருகால் நவநாதரின் சமாதியருகில் நிஷ்டை கூடுவார். அது கலைந்தபின் சந்நிதியில் தியானங் கொள்வார். சில பொழுது நவநாதர் உலாவிய தபோவனத்தில் உலாவருவார். இவை யாவும் அவருக்கு மன அமைதியைத் தந்தது. நவநாதசித்தர் குயின்ஸ்பரி முருகன் ஆலயத்துச் சூழலிலும் பெரியானைக்குட்டி முகத்துவாரம் பிள்ளையார் ஆலயக்கடற்கரையிலும் சமாதி கொண்டனர். இவர்தான் எங்கே சமாதியடைவதென்று ஏங்கித் தவித்தார். நவநாதச் சித்தர் தன்னை மூன்றாவதாகச் சமாதியடைவாய் என்று பிரம்பால் தொட்டுக் காட்டிய குறிப்பை நினைத்து அந்நாளை எதிர்நோக்கியிருந்தார்.

பெரியானைக்குட்டிச் சுவாமியார் சமாதியடையுங் காலத்தில் அவரை அகலாது சித்தானைக்குட்டிச் சுவாமியார் சுற்றித் திரிந்ததை குறிப்பால் உணர்ந்து சித்தானையை அழைத்துக் குறிப்பு மொழிகளைக்



கூறி ஞான உபதேசம் செய்து அவரைச் சீடனாக்கி விட்டுச் சமாதிக் காலத்தில் நிற்கவும் விடாது துரத்திவிட்டார். அவர் அங்கு கூறி வைத்தன சித்தானையின் வாழ்க்கையில் நிஜமாகின. எனினும் பெரியவனாய்த் துலங்குவாய், பொம்பிளைக் கள்ளன் என்று உன். உள்ளத்தூய்மையைத் தெரியாதவர் பழி சுமத்துவர், நீ பல சித்துக் கள் விளையாடுவாய் என்பவையே அவையாகும். இதனை நாம் இங்கு காட்டும் பகுதியிலிருந்து தெளிவாக அறியலாம்.

குயின்ஸ்பரித் தோட்டத்தில் தொழிலாளர் மத்தியில் பல சித் துக்களைச் செய்து அவர்களுக்கு கடவுளிடம் பக்தியை உண்டாக்கிய சித்தானைக்குட்டி அங்கிருந்தும் விடைபெற்றுக் கொண்டு கால்நடை யாகவே கதிர்காமத்துக்கு வந்துசேர்ந்தனர். கதிர்காமத்துக்கு வந்து சேர்ந்த சுவாமியார் மாணிக்ககங்கையில் தீர்த்தமாடினார். பின் கதிர் காமத்தானைச் சென்று வழிபட்டார். அடுத்து மாணிக்கப்பிள்ளையா ரையடைந்து வழிபட்டபின்னர் அவ்வாசல் கதவின் ஒருபுறம் ஒதுங்கி யிருந்து முருகன் அருள்வேண்டி உண்ணா நோன்பினை மேற் கொண்டார். இந்நோன்பு நீண்டு சென்றது. பலவாரங்கள் கழிந்த பின் முருகன் ஆலயத்துக்குள்ளிருந்து கப்புறாளையார் சுவாமியிடம் நேரே வந்தார். உம்மை அப்பன் அழைக்கின்றான் வாரும் என்று கோயிலுக்குள் அழைத்துச் சென்றார் சுவாமியாரும் எழுந்துசென்றார். உள்ளே சென்றதும் சுவாமியாரை ஒரு சுரங்கப்பாதையால் நீண்ட தூரத்துக்கு அழைத்துச் சென்றார். கதிர்காமக்கந்தன் அங்குள்ள ஏழுமலையிலிருந்தும் அருவிநீரினை மூன்றுமுறை சுவாமிகள் எடுத்து வாயில் இட்டார். அந்த அமிர்தத்துளிகள் வாய் வழி சென்று உடம்பினிற் சொரிந்து உடம்பினில் ஒரு புதுத்தெம்பை உண்டாக்கின. உண்ணாநோன்பின் களைப்பும் மாறியது. அப்போது முருகன் சுவா மிகளின் கண்களை மூடும்படி பணித்தார். பின் கண்ணைத் திறந்த போது சுவாமிகள் தான் கதிர்காமத்து ஆலய வீதியில் நடப்பதை உணர்ந்து மிகவும் ஆச்சரியப்பட்டார். பின்னர் அக்காட்சிகளை நினைத்து சுவாமியார் முருகனைப் பலவாறாக நினைந்து உருகினார். முருகன் பேரில் பாமாலைகளையும் புனைந்து சூட்டினார். இது முதலாகச் சுவாமிகள் பாடிய பல அரும் கருத்துக்கள் நிறைந்த பாடல்கள் அவ்வப்போது எழுத்துருவம் பெறாதது எங்கள் தவக் குறைவே.

சுவாமியார் கதிர்காமத்தைப் பிரிய முடியாத மன நிலையில் ஒருவாறு அங்கிருந்தும், அயல் கிராமங்களில் சுற்றித் திரிந்து விட்டு

திசமகரமவுக்கு வந்தசேர்ந்து அங்கு P. W. D. ஓவசியராக இருந்த முத்துக்கந்தையாவின் வீட்டுக்குச் சென்றார். ஓவசியரின் மனைவி சேதம்மா. இவர் ஏழைகளுக்கு இரங்கி உதவுவார். சாதுக்களை அன்போடு உபசரித்து அமுதளித்து அனுப்புவார். இதெல்லாம் நித்திய குடிகாரனாகிய ஓவசியருக்குப் பிடிக்காது. குடும்பத்தில் பற்றுதலுக்கு ஒரு பிள்ளைச் சந்தானமும் கிடையாது. ஓவசியர் குடித்து மகிழ, அம்மையார் கொடுத்து மகிழ்வார்.

சேதம்மா தம் வீட்டுக்கு வந்த சுவாமியாரைச் சிவபெருமானே எழுந்தருளித் தனக்கு அருள்பாலிக்க வந்திருப்பதாக நினைத்து உபசரித்து அவருக்கு வேண்டியன செய்து உதவினார். சுவாமிகள் கதிர்காமக் கொடியேற்றத்துக்கு இன்னமும் சிறிது காலம் இருக்கிறது அதுவரை இங்கு தங்கிச் செல்லலாமே என்று சேதம்மா வேண்டினாள். அதற்குச் சுவாமிகள் இங்கு நான் தங்குவது தன் துறவு ஆச்சிரமத்துக்குச் சரிவராது. இல்லறத்தார் இயல்புடைய மூவர்க்கும் நல்ல துணையாக இருப்பது உண்மையாயினும் துறவிகள் ஒரு நேரச் சாப்பாட்டிற்கு மேல் இங்கு தங்கக் கூடாது என்று மறுத்தார். நான் இங்கு தங்குவது உமக்குப் பொல்லாப்பாய் முடியும். வீண் சந்தேகங்கள் உருவாகும் என்று கூறினார். எப்படியாயினும் சாப்பாட்டு நேரத்துக்காவது வந்து போகும்படி சேதம்மா சுவாமியாரை வேண்டிக்கொண்டார்.

சுவாமியார் இடையிடையே பசித்த நேரம் வீட்டுக்கு வந்து முற்றத்தில் நின்று உணவைப் பெற்று உண்டதும் உடன் மீண்டு விடுவார். தன் மனைவி ஆண்டிப் பரதேசிகளுக்குத் தானில்லாத நேரங்களில் அள்ளி வழங்குவதை ஓவசியர் மிகவும் கண்டித்து வந்தார். ஒருநாள் நன்றாகக் குடித்து விட்டு வந்து மனைவியைப் பலவாறு பேசியும் அடித்தும் துன்பறுத்தினார். கட்டிய புருஷன் நான் மலை போல இருக்க ஆண்டியோடு உனக்கென்னடி தொடர்பு என்று வம்பு பேசி மனைவியை நல்லாய் அடித்தும், உதைத்தும் விட்டதால் சேதம்மா அன்று இரவு முழுவதும் எழும்பமுடியாமல் ஒரே படுக்கையாகக் கிடந்தார். அன்று சாப்பாடு சமைத்திருந்தும் ஓவசியருக்கு உணவு வழங்கப்படவில்லை. மறுநாள் காலையும் சேதம்மா எழும்ப வில்லை ஓவசியர் காலை எழுந்து வேலைக்குப் போய்விட்டார். அம்மையார் அப்பொழுதும் எழுந்திருக்கவில்லை.



வழக்கம் போல சாமியார் ஓவசியர் வீட்டு முற்றத்தில் வந்து நின்றார். சமையற்காரன் சுவாமியிடம் வந்து நடந்தவற்றைக் கூறி ஓவசியர் வரமுன் செல்லும்படியும் கூறினார். சுவாமியார் சிரித்துக் கொண்டு அப்படியா நான் போகிறேன் ஆனால் இரவு முழுவதும் உடம்பெல்லாம் வலி, இரண்டு மூன்று மிளகும் வேர்க்கொம்புத் துண்டும் ஒன்று தந்தால் போதும் நான் போய் விடுகின்றேன் என்று வேலைக்காரனிடம் சுவாமி கூறினார். அவரும் அவற்றைப் பெற்றதும் சுவாமி அங்கிருந்து போய்விட்டார்.

ஓவசியர் வீட்டுக்கு அயலிலே கள்ளிப் பற்றை ஒன்று இருந்தது. அதன் அண்மையில் சுவாமி போய் நின்று கள்ளிகளைப் பார்த்து படபட என்று கூறினார். நிமிர்ந்து ஒய்யாரமாய் நின்ற கள்ளிகளும் சுவாமியார் கூறியதும் படுத்துவிட்டன. அதன் மீது உட்கார்ந்து கொண்டு ஒரு கள்ளியைக் கத்தியால் தோண்டினார். அதற்குள் வேர்க்கொம்புத்துண்டையும் மிளகுகளையும் அடைத்தார். கஞ்சாப் புகையிலையை எடுத்துக் கஞ்சாக் குழலில் இட்டார். பின் கள்ளியில் அடைத்த வேர்க்கொம்பு, மிளகை வைத்துத் தீ மூட்டி வாயால் இழுத்து மேலே புகையை ஊதினார். நிமிர்ந்து பார்த்தார் அந்தப் பரந்த வெளியிலே ஏழுமலைகளும் தெரிந்தன. அதனைப் பார்த்தபடி ஆவேசங்கொண்டு ஏழுமலையானே! நீ கள்வனா? அல்லது நான் கள்வனா? அல்லது முத்துக்கந்தையன் கள்வனா? என்று உரத்துக் கூறி மீண்டும் புகையை இழுத்து வெளியில் விட்டபடி எழுந்தார். நவநாதன் ஆணை, கதிர்காமத்தான் ஆணை என்று கூறிக்கொண்டு கதிர்காமத்துக்குப் பயணமானார். கதிர்காமத்துக்கு வந்து சேர்ந்த சுவாமியார் அங்கு பல சித்துக்களைச் செய்துவிட்டு அங்கிருந்தும் புறப்பட்டு அம்பாந்தோட்டையையடைந்து கப்பல் ஏறிச் சுவாமியார் மட்டக்களப்புக்கு வந்தார்.

மட்டக்களப்பில் கார்த்திகேசு சுப்பிரமணியம் என்கின்ற ஒரு பக்தர் வீட்டுக்குச் சென்றார். அவரின் உபசரிப்பில் சுவாமியார் பலகாலம் தங்கியிருந்தார்.

சுவாமியார் மட்டக்களப்பில் மதிப்போடு பல பக்தர்களின் அனுசரணையில் நன்கு மதிக்கப்பட்டுக் கொண்டிருக்க அங்கு முத்துக்கந்தையாவுக்குச் சோதனைக்காலம் ஆரம்பித்துவிட்டது.

காரணமெதுவுமில்லாது இஞ்சினியர், ஓவசியருடன் வெறுப்புக் காட்டத்தொடங்கினார். அவர் வேலையில் குற்றங் கண்டு தற்காலிகமாக நிறுத்தப்பட்டார். பின்னர் நிரந்தர வேலை நீக்கமும் அவருக்கு வழங்கப்பட்டது. உழைத்த பணத்தைக் குடித்து வெறித்து அழித்த கந்தையருக்கு நாளடைவில் கைச்செலவிற்கே பணமில்லாமல் திண்டாடப்பட நேர்ந்தது. இப்பொழுதுதான் தன் தகாத செயலால் இது நேர்ந்தது, சுவாமியை வீண் வம்புக்கு இழுத்ததால் வந்த வினை என்று நினைக்கத் தொடங்கினார். மனைவியை அன்பாக அழைத்துச் சுவாமியாரிடம் சென்று இதற்குப் பரிகாரம் தேடிக்கொண்டு வா என்று அவரை மட்டக்களப்புக்கு அனுப்பினார் ஓவசியர். அம்மையாருக்கும் சுவாமியைக் கண்டு தங்களை....? வேண்டும் விருப்பமும் இருந்தது. அவர் கப்பல் மூலம் மட்டக்களப்புக்கு வந்தார். நேரே சுவாமியார் இருக்கும் இல்லத்துக்குச் சென்றார். அவர் பாதத்தில் விழுந்து கண்ணீரால் கழுவிக் குறையிரந்து நின்றார். தங்கள் குற்றங்களை மன்னிக்கும்படி வேண்டினார். தன் கணவர் திருந்தி விட்டதாகவும் கூறினார்.

சுவாமியார் அம்மையாரைத் தேறுதல் கூறி நான் ஒருவருக்கும் தீங்குநினைக்கவில்லை. "தாம்தாம் செய்தவினை தாமே அனுபவிப் பார்கள்" அதனை மற்றவர்கள் அனுபவிக்க முடியாது. நீங்கள் கதிர் காமத்துக் கந்தனை வழிபடுங்கள் அவன் எல்லாரையும் காப்பான் என்று கூறி அம்மையாரை வீட்டுக்கு அனுப்பி வைத்தார். அவரும் திசமகரகமவுக்கு வந்துசேர்ந்தார். நடந்தவை யாவற்றையும் கணவரிடம் கூறினார். அவருக்கு நாளும் பல தொல்லைகள் வந்து சேர்ந்தன. கடன்காரர் கடனைப் பெற முடியாமல் கோட்டுக்கு ஓவசியரை அழைக்கலாயினர். வாழ்க்கையும் பெரிய கஷ்டமாக மாறிவிட்டது.

சேதம்மாளும் தன்னால் ஓவசியருக்கு எந்தவித நன்மையும் வரப்போவதில்லை. இதுவரை திருந்தாதவர் இனித் திருந்துவார் என்று எதிர்பார்ப்பது தவறு. தான் பிரிந்தால் ஒருவேளை திருந்தக் கூடும் என்று நினைத்தார். கதிர்காமக்கந்தனை உறுதியாக மனத்தில் நினைத்துக் கொண்டு மீண்டும் மட்டக்களப்புக்குச் சுவாமியாரிடம் சென்று சேர்ந்தார்.



மட்டக்களப்புக்குச் சென்ற அம்மையார் சுவாமியாரின் பாதங்களைச் சரணடைந்தார். அம்மையாருக்குக் காரைதீவில் ஒரு காணியும், வீடும் இருந்தது. அதனை முன்னரே சுவாமியார் பேரில் எழுதிக் கொடுத்திருந்தார். இப்பொழுது சுவாமியாரும் சேதம்மாளும் அங்கு சென்று வசிக்கலாயினர். சேதம்மாளுக்குச் சுவாமியாரே மாதா, பிதா, குரு, தெய்வம் ஆயினார். அவருக்கு அடிமைத்திறம் பூண்டு ஒழுக லாயினர். சுவாமியாரிடம் வருபவர்களை மனங்கோணாது உபசரித்து வேண்டியன செய்து வந்தார்.

சுவாமிகளிடம் அவருடைய அருளைப் பெறுவதற்குப் பல்வேறுபட்ட மக்களும் வரலாயினர். அவர்களின் மனப் பக்குவத்திற்கேற்பச் சுவாமிகள் அவர்களுடன் நடந்து கொண்டார். கண்நோய் முதலாகப் பல நோய்களையுந் தீர்த்து வைத்தார். சிலரிடம் சாராயம் எடுத்து வா என்றும் கேட்பார். அருவருத்தகன்றவர்களுமுண்டு, சிலருக்கு அதனைப் பெற்று வைத்து வார்த்துக் கொடுப்பார். சுவாமி தந்த சோடா நன்றாக இருந்ததென்று கூறி மகிழ்ந்தவர்களும் உண்டு.

ஒருநாள் அடியாரும், சுவாமியாரும் சமையல் செய்து முடித்திருந் தனர். இன்று விருந்தாளிகள் வருவர், பொறுத்திருப்போம் என்றார். நாலுபேர் அங்கு வந்தனர். எல்லோருக்கும் உணவு வழங்கப்பட்டது. உணவை உண்டவர்கள் சுவாமியார் தந்த கீரைக் கறி நன்றாயிருந்தது என்றார்கள். ஆனால் அங்கு ஆக்கப்பட்டதோ கோழிக்கறி. எப்படியிருக் கிறது சுவாமியாரின் சித்து. அங்கு வந்தவர்களில் ஒருவர் சுவாமி யார் என்ற பதத்தின் அர்த்தம் என்ன என்று வினாவினார்.

சுவாமியார் மகிழ்ச்சியோடு ஆசாடபூதிகளும் சுவாமியாராக நடிக்கிறார்கள். எல்லோரும் மக்கள் கும்பிட்டாலும் சுவாமியாராக மாட்டார்கள். அப்பதம் கடவுளுக்கும் அவன் அருள் வழிவந்தோரையும் தான் குறிக்குமென்று விடை பகர்ந்தார். சுவாமியார்கள் அவதார புருஷர்களாகவே அமைவர் என்றார். மற்றையோருக்கு அது வழங் குவது அவம் என்று கூறி முடித்தார்.

ஒரு முருக பக்தர். பழனியிலிருந்து கதிர்காமத்துக்கு வந்து முருகனைத் தரிசித்துக் கொண்டு சித்தானைக்குட்டி சுவாமியாரிடம் வந்தார். அவரை நிலந்தோய வீழ்ந்து வணங்கி ஒரு பக்கத்தில் ஒதுங்கியிருந்தார். அவரிடம் கந்தசஷ்டி கவசத்தை எடுத்து ஒரு பக்கத்தைப் புரட்டி அதனைப் படிக்கும்படி கொடுத்தார். அவருடன் கேட்டுக் கொண்டிருந்த அனைவரையும் தியான நிலைக்குக் கொண்டு சென்று விட்டார் சுவாமியார்.

சித்தானைக்குட்டிச் சுவாமியார் தன்னிடம் வந்து தரிசனம் பெற்ற ஞானானந்த சுவாமிகளுக்கு அருளிய மந்திரங்கள் மூன்றும் நமக்குப் பொருந்துவனவே அவை.

1. “உன்னிடத்தில் உள்ளதை இல்லையென்னாமல் மற்றவர்களுக்கும் கொடு”
2. “எங்கும் அலையாதே, இருந்தபடி இரு”
3. “கோபத்தை விடு, முருகன் அருள் தானே வரும்”

என்பன. இம்மந்திரங்களை நிலத்தில் எழுதிக்காட்டியே விளங்க வைத்தார் சுவாமியார். குரு வழிகாட்டியே தவிரக் கடவுளைக் காட்டு பவர் அல்ல. சாதகரின் சாதனையாலேயே கடவுளைக் காணமுடியும். அவன் அருளைப் பெறமுடியும் என்பதே சுவாமியாரின் கருத்தாகும்.

விபுலானந்தரில் சுவாமியாருக்குப் பற்றுண்டு. அவர் நோய்வாய்ப் பட்டு கொழும்பில் இருக்கும் போது அந்நேரம் தான் அனுபவித்ததைப் பலரும் கண்டு அதிசயித்தனர். வெள்ளையன் என்ற வைத்தியர் நவநாதரின் சமாதிக்குச் சென்று தரிசித்தபின் விபூதி சந்தனத்தை மட்டக்களப்புக்குக் கொண்டு வந்து சுவாமியிடம் கொடுக்கப் பலர் அங்கு இருந்ததால் ஒரு பக்கமாக ஒதுங்கி இருந்தார். சிறிது நேரம் கழித்துக் கொண்டு வந்த விபூதி சந்தனத்தைக் கொண்டு வாடா என்று சுவாமியார் சத்தமிட்டார். எல்லோரும் ஒருவரை ஒருவர் பார்க்கச் சுவாமியார் வைத்தியரின் மடியிலிருந்த விபூதி சந்தனத்தை எடுத்து எல்லோருக்கும் வழங்கினார். எல்லோரும் அதனை அணிந்து கொண்டனர். சமாதியில் வைப்பதாக நேர்ந்த விளக்கினை அந்த மரத்தடியில் வை என்றும் அவரிடம் கூறினார். இதன் அர்த்தம் நவநாதர் தன்னோடும் இருக்கிறார் என்பதேயாகும்.

சுவாமிகளில் மிகுந்த பக்தி பூண்டு ஒழுகியவர்களில் கந்தப் போடியார் என்பவர் முதன்மையானவர். கடவுளும் சரி, சித்தர்கள் என்று கூறப்படும் சாதுக்களும் சரி தன்னடியார்களைக் கடுமையாகச் சோதிப்பது வழக்கம். பஞ்சமும் நோயும் நின்னடியார்க்கோ என்று இறைவனிடம் கேட்டு நின்ற மெய்யடியார்களையும் நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். கந்தப்போடியாருக்கும் அப்படியொரு சோதித்த



நிலையை நாம் அறியமுடிகிறது. அவருடைய மனைவியாருக்குச் சுகவீனம் உண்டாயிற்று. ஆஸ்பத்திரி மருந்தினால்க் கூடக் குணப்படுத்த முடியவில்லை. இதனைச் சுவாமியாரிடம் சென்று முறையிட்டார். அவரும் அது தன்பாட்டுக்கு வந்தபடியே போகும் நீ வீட்டுக்குப் போ என்று கூறி அனுப்பினார். அவர் வீட்டுக்கு வந்து பார்த்தபோது நோய் குணமாகி இருக்கக் கண்டார். பின் ஒருநாள் நோய் திடீரென கடுமையாகி மூச்சடைத்து மூச்சுப் பேச்சில்லாத மரணநிலையாகி விட்டது. போடியார் “சுவாமியாருக்குப் பயம் ஏன்” என்ற உறுதிப்பாட்டுடன் சுவாமியாரை அழைத்து வரச்சென்றார். நான் வரும் அளவும் ஆளை ஒன்றும் செய்யக்கூடாது அப்படியே இருக்கவிடுங்கள் என்று கூறியே கந்தப்போடியார் சென்றார். அவர் சுவாமியிடம் வந்து அவரின் பாதங்களில் விழுந்து அழத்தொடங்கிவிட்டார். நிலைமையைத் தெரிவித்தும் சுவாமியாருடைய திருவுள்ளம் நெகிழ்ந்தபாடில்லை. கந்தப்போடியார் சுவாமியாரிடம் அடி உதை வாங்கியது தான் மிச்சம். பக்தரும் சுவாமியாரின் கால்ப்பிடியை விட்டு அகன்றாரில்லை. ஒருவாறு சுவாமியாரின் திருவுள்ளம் நெகிழ்ந்து “காரைப்பிடி போவோம்” என்றார். கார் மூலமும், வள்ளம் மூலமும் சுவாமியார் அழைத்து வரப்பட்டார். சுவாமியாரும் பாதம் நிலம் தேயாது அங்கு வந்து சேர்ந்தார். போடியார் வீடும் சனக்கூட்டத்தால் நிறைந்து வழிந் தது. சுவாமியார் நோயாளியைப் பார்த்து இன்னும் ஏன் படுத்திருக்கிறாய் நித்திரையோ எழுந்திரு அம்மா என்றார். என்ன ஆச்சரியம் அம்மை யார் கண்ணைத் திறந்து பார்த்தார். சிறிது நேரத்தின் பின் கண்ணை உருட்டி சுற்றும் முற்றும் பார்த்தார். இவ்வளவு சனங்களும் இங்கு வந்து நிற்கின்றார்களே. என்ன காரணம், என்று அம்மையார் அந் நினைவில் ஆழ்ந்தார். மாண்டவர் மீண்டார் என்று மக்களும் ஆரவா ரம் செய்தனர். மரணச் சடங்குகளைச் செய்து கொண்டு நின்றோரும் அதனைக் கைவிட்டுச் சென்றார்கள்.

இங்ஙனமாக சுவாமிகளின் சித்துக்கள் அதிகம். அதனை விரித்தெழுத நீளும். அவர் ஆட்டுக்கறியைக் கத்தரிக்காய்க்கறியாக்கிக் கொடுத்தமை, சாராயத்தை சர்பத்தாக்கிக் கொடுத்தமை அதை உண்டு அனுபவித்தவர்களுக்கே தெரியும். குத்துவிளக்கு எண்ணெய் குறைந்து அணையும் தறுவாயில் நீரை ஊற்றி எரியச் செய்த சம்பவமும் உண்டு.

இன்னும் ஒரு பெரிய சம்பவத்தைச் சுருக்கமாகக் கூறிவைக்க வேண்டியுள்ளது. அதுதான் கதிர்காமத்தையன் திரைச்சீலை பற்றிய சம்பவம் ஆகும். ஒருநாள் அங்கு திருவிழா நடந்து கொண்டு இருந்தது. அப்போது ஆலயத்திரைச்சீலை தீப்பற்றிக் கொண்டது. அவ்வேளை சுவாமியார் நின்ற இடம் மட்டக்களப்புக் கல்முனைச் சந்தியாகும். அந்நேரம் அடியார்கள் அவரைச் சூழ்ந்து நின்றார்கள். சுவாமியார் திடீரென தான் அணிந்திருந்த வஸ்திரத்தைக் களைந்து கசக்கத் தொடங்கினார். பார்த்துக்கொண்டு நின்றவர்களை "என்னடா பார்த்துக் கொண்டு இருக்கிறியள். கதிர்காமத்தையன் திரைச்சீலை தீப்பற்றி எரிந்துகொண்டிருக்கிறது" என்றார். கூட்டமாக நின்றவர்களுக்கு ஒன்றுமே புரியவில்லை. அடுத்தநாள் கதிர்காமத்தில் இருந்து வந்த ஒருவர் சுவாமியார் அந்த நேரம் அங்கு வந்து தீப்பற்றி எரிந்த சீலையைக் கசக்கி அணையாதிருந்தால் ஒருவரும் மிஞ்சியிருக்க முடியாது என்றார். இதனைக் கேட்ட அங்கு கூடியிருந்தோர் அன்று சுவாமியார் கல்முனைச் சந்தியில் எங்கள் மத்தியில் நின்றாரே என்ன கூறுகின்றீர்கள் என்று ஆச்சரியப்பட்டார்கள். சித்தர்கள் ஒரே நேரத்தில் பல்வேறு இடங்களிலும் சஞ்சரிக்க வல்லவர்கள் என்பதை புரிந்துகொள்ள வேண்டும்.

சுவாமியார் சாதுக்கள் சந்நியாசிகள் நடந்துகொள்ள வேண்டிய விதிமுறைகளை விளக்கிக் கூறியிருக்கின்றார்கள். அதனை அவர்கள் கைக்கொண்டு ஒழுகுதல் இன்றியமையாதது. திசமகரகமத்தில் சேதம்மாவுக்கு அவரின் முற்றத்தில் எடுத்துரைத்தது போலப் பல்வேறு இடங்களிலும் சந்நியாசிகளின் ஒழுக்கக்கட்டுப்பாடுகளை கூறி வந்திருக்கிறார். அவற்றினை நாமும் அறிந்து சாதுக்களுக்கு அனுசரணையாக நடந்துகொள்ள வேண்டும். நாம் அவர்களை அளவுக்கு மீறி வீடுகளில் வைத்து உபசரித்து அவர்களுக்கு அபகீர்த்தியை உண்டாக்கவோ மற்றவர்களின் வீண்பேச்சுக்கு ஆளாகவோ இடமளிக்கப்படக்கூடாது. அவர்களை அவர்களின் ஆச்சிரம வாழ்க்கையில் ஒழுகவிட்டு ஆதரிக்கவேண்டும்.

சுவாமியாரின் சில உபதேசங்களை நீங்களும் படித்தறிவது நன்று.



1. சந்நியாசிகள் ஒருநாளைக்கு ஒரு பொழுது யாசகம் பெற்று உண்ண வேண்டும். அதுவும் நண்பகலுக்கு முன் நிகழவேண்டும்.
2. ஏதாவது ஒருதரம் உபதேசப் பிச்சை இட்டது செய்தல் வேண்டும்.
3. ஒரு ஊரில் மூன்று பொழுதுக்கு மேல் தங்கக்கூடாது.
4. சந்நியாசி யாத்திரைக்காரனைப் போல் எங்குந்தங்காது செல்ல வேண்டும்.
5. வசதி பார்த்து நித்திரை கொள்ளக் கூடாது.
6. ஒரு வீட்டில் நுழையும் போது அங்கிங்கு பாராது பெருவிரலைப் பார்த்து கர்ப்பிணியின் நடைபோல் நடந்து இறைவன் புகழைப் பாடிக்கொண்டு இட்டதைப் பெற்றுக் கொண்டு என்ன இட்டது என்று ஆராயாது கணப்பொழுதில் மீளவேண்டும்.
7. ஒருவன் சந்நியாசி ஆகமுன் பரிவிராஜக யாத்திரையை மேற்கொள்ள வேண்டும்.
8. உணவு கிடைத்தால் உண்ணவேண்டும். எங்கு படுக்க நேருதோ, அங்கு படுக்கவேண்டும்.
9. கையில் பணம் இன்றி எங்கு செல்கின்றேன் என்ற எண்ணமின்றி வாய்ப் பேச்சின்றிக் கடவுளைத் துணையாகக் கொண்டு முன்பின் அறியாத இடத்துக்குப் போய்ச்சேர வேண்டும்.
10. எவரின் துணையும் நாடாது இறைவனையே நம்பி நாளைய சிந்தனையின்றிப் பொழுது கழியவேண்டும்.
11. இறை நாட்டத்தில் சாதனை பயிலவேண்டும்.

## சுவாமியின் மகாசமாதிப் பேறு

சித்தர்கள் தம் மதியில் நிறைவுடையவர்கள். திருவருள் துணை கொண்டு தாங்கள் சமாதியடையும் காலத்தை அறிந்து வைத்திருப்பர். அதற்கேற்பச் செய்ய வேண்டியனவற்றையும் தம் பக்தரிடம் கூறி வைத்திருப்பர். அங்ஙனமே சித்தானைக்குட்டிச் சுவாமியாரும் தம் சமாதிப்பேறு பற்றியும் தம் பக்தர்களிடம் கூறி வைத்திருந்தார்.

ஒருநாள் சுவாமியார் தம் பக்தரின் வீட்டுக்குச் சென்றிருந்தார். அவரின் தலை முடி வளர்ந்திருந்தது. அதனைக் களையப் பக்தர் ஏற்பாடு செய்தார். தொழிலாளி வந்து சவரம் பண்ண ஆரம்பித்தார். சுவாமியார் சவரக்கத்தியைத் தட்டிவிட்டு எழுந்து சென்றார். இதனைப் பக்தர்கள் சமாதியடையப் போகும் அறிகுறியாகக் கருதினர். சுவாமியார் குறித்தபடி 10-05-1951ல் மகாசமாதிப் பேறடைந்து பரிபூரணம் எய்தினார். சுவாமியாரின் பக்தர்களும் இலங்கையின் பல பாகத்திலிருந்தும் வந்து சேர்ந்துவிட்டனர். சித்தானைக்குட்டி சேவா சங்கம் ஒன்று நிறுவிக் கிரியைகளைச் செய்யலாயினர். நான்கு தினங்களுக்குச் சுவாமியை பத்மாசனத்திலிருத்திப் பூசைகள் கிரியைகள் செய்தனர். நிலத்தில் மூன்றடி கனபரிமாணத்தில் குழிதோண்டி மண்ணை எடுத்துச் சாணியைத் தகனித்த நீற்றுடன், உப்பு, செங்கல்மா, வேப்பங்கரி, வேண்டியளவு கற்பூரம், சந்தனப்பொடி ஆகியன இட்டு, வேண்டியளவு அத்தரும் உபயோகத்துக்கு எடுத்து வைத்துக் கொண்டனர். தன் அடிவயிற்றில் இரத்தம் பெருக்கெடுக்கும் அதன் பின்னரே சமாதி வைக்க வேண்டுமென்று சுவாமியார் கூறியிருந்தார். அங்ஙனம் மூன்றாம் நாள் இரத்தம் பெருக்கெடுத்தது. நான்காம் நாள் ஆடிச் சோதியில் சுவாமியைச் சமாதி வைத்தனர்.

இங்ஙனம் உயிரில்லாத உடம்பிலிருந்து இரத்தம் பெருக்கெடுக்குமா? இது மேலைத்தேய வைத்தியத்துறையினர் சர்ச்சை கிளப்பினர். மகான்களின் முடிவில் நாம் எதைக்கூற வல்லோம். சுவாமிகள் ஜீவனோடு உலாவிய காலத்தில் நடந்த அற்புதங்கள் சமாதிப்பேறடைந்த பின்னரும் அவை நடந்து கொண்டிருந்தது ஒரு தெய்வீகமே.

வருடந்தோறும் சுவாமியார் சமாதிப்பேறடைந்த நன்னாளைப் பெரும் திருவிழாவாக சமாதியிலும் சமாதிக் கோயிலிலும் செய்து வருகின்றார்கள். சுவாமியாரின் பக்தர்கள் எங்கிருந்தாலும் அன்று கல்முனைக்குச் சமூகம் தரமறக்கமாட்டார்கள். அன்று சுந்தரமூர்த்தி நாயனாரின் குருபூஜை தினமாகும்.

*****************

